| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அந்தோணிசாமி | அ.வ.எண். 263/2015 | 26.11.2025 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் ஜெயலெட்சுமி மற்றும் நடேசன் ஆகியோருக்கு எதிராக அ.வ.எண்.133/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஜெயலெட்சுமி மற்றும் நடேசன் இறந்த பின்னர் அவரது வாரிசுதாரர்களை தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் மேற்படி நபர்களுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்தை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் அதனால் அ.வ.எண்.133/2015 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் பின்னிட்டு ஜெயலெட்சுமி எனக்கு மற்றும் மேலும் 2 நபர்களுக்கு எதிராக அ.வ.எண்.263/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் ஜெயலெட்சுமிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் ஆரோக்கியசாமி மற்றும் அமுல் ஆகியோருக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2) அ.வ.எண்.133/15 வழக்கு தாக்கல் செய்வதற்கு தகவல்களை நான் தான் கொடுத்தேன். மேற்படி அமுல் மற்றும் ஆரோக்கியசாமி தகவல் எதுவும் கொடுக்கவில்லை. ஜெயலெட்சுமி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அவர்களது இடத்தில் நாங்கள் வீடு கட்டியிருப்பதாக சொல்லி மேற்படி இடத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார். 2015 ம் ஆண்டு வாதி ஜெயலெட்சுமி அவரது இடத்தை அளந்தாரா என்றால் இல்லை. நான் தற்போது வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும், ஜெயலெட்சுமி அவரது இடத்தை 2015 ம் ஆண்டு அளந்தார் என்றாலும் சரியல்ல. அவ்வாறு

அளக்கும்போது தான் வாதிக்கு தென்வடல் 5 மீட்டர், கிழமேலாக 6 மீட்டர் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தது தெரியவந்தது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 03.12.2025 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
அந்தோணிசாமி

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

ஓம்/–xxxxx,

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.